# நெல்லி தீர்த்த குகை சிவாலயம்

## சாந்திப்பிரியா



கர்நாடக மானிலத்தில் மங்களூருக்கு அருகில் உள்ள அமைதியான இடத்தில் உள்ளதே நெல்லி தீர்த்த சோமேஸ்வரா குகை சிவாலயம் ஆகும். 15 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக கூறப்படும் இந்த குகை ஆலயத்துக்குள் செல்ல தரை மீது ஊர்ந்துதான் போக வேண்டி உள்ளது . ஆலயத்தில் உள்ள நீர் குளத்தின் மத்தியில் காணப்படும் சிவலிங்கம் சாலிகிராம கல்லிலானது, அர்த்தநாரீஸ்வரர் உருவில் அமைந்தது என்கின்றார்கள் .

அந்த குகைக்குள் நெல்லிக் காய் போன்று தண்ணீர் துளிகள் வந்து விழுவதினால் அதற்கு நெல்லி தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டதாம். அந்த குகைக் கோவில் அக்டோபரில் இருந்து ஏப்ரல் மாதம் வரைதான் மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டு இருக்கும். குகையில் வந்து சேரும் தண்ணீர் பூமிக்குள் ஊடுருவி சுத்தமடைய வேண்டும், அப்பொழுதுதான் அதில் உள்ள பாம்பு, தேள், வௌவால் மற்றும் பல விஷஜந்துக்கள் போன்றவை நலமாக இருக்கும் என்பதற்காகவே மற்ற ஆறு மாதம் அது மூடப்பட்டு இருக்கும். அந்த ஜீவராசிகள் குகை புனிதமானவையாக கருதப்படுவதினால் அவற்றை கொல்வதற்கு அனுமதி இல்லை. அது குற்றம் ஆகும். ஆனால் அந்த ஜீவராசிகள் எதுவுமே இதுவரை எவரையும் துன்புறுத்தியது இல்லை என்பது ஆச்சரியமான வரலாறு.

அந்த ஆலயத்தின் கிழக்குப்புறம் 'அம்பலத்தாட்டப்படவு' என்ற அற்புதமான இயற்கை காட்சிகளைக் கொண்ட மலையுச்சி 500 மீட்டர் உயரத்தில் உள்ளது. வடக்குப் பகுதியில் 'நாகப்பாகரே' என்ற குளம் உள்ளது. புனிதமானதாகக் கருதப்படும் அந்த குளத்தில் குளித்த பின்னர்தான் பக்தர்கள் குகைக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அதன் பக்கத்திலேயே 'அரசுலே மன்சா' என்ற பெயர் கொண்ட இடம் உள்ளது. முன் காலத்தில் அந்தப் பகுதியை ஆண்டு வந்த மன்னர்கள் அந்த இடத்தில்தான் வந்து அமருவார்கள் எனவும், இன்றும் இரவு நேரங்களில் அந்த மன்னர்களின் ஆவிகள் அங்கு வந்து சுற்றித் திரிவதாக நம்பப்படுகின்றதால் இரவு அந்த இடத்தில் செல்ல எவருக்கும் அனுமதி தரப்படுவது இல்லை.

குகை நுழை வாயில் பெரியதாக இருந்தாலும், உள்ளே செல்லச் செல்ல வழி குறுகலாகி விடும். அங்கெல்லாம் குனிந்தபடி செல்ல வேண்டி உள்ளது. கடைசி கட்டத்தில் உள்ள குகை பகுதியில் அதாவது 300-400 அடி அளவுக்கு ஊர்ந்தபடித்தான் குகைக்குள் செல்ல முடியும். அதன் பின் மீண்டும் பாதை பெரியதாகி விடுகின்றது. குகையில் ஒரு பெரிய குளம் உள்ளது. குளத்தின்

மத்தியில் சிவலிங்கம் அமைந்துள்ளது. அந்த குகையில் உள்ள தரைப் பகுதியில் உள்ள மணல் மிகவும் புனிதமானது, நோய்களைத் தீர்க்கவல்லது என்பதினால் அதைப் பிரசாதமாகத் தருகின்றனர். சிவலிங்கத்தைத் தாண்டி இன்னொரு குகை உள்ளது. ஆனால் அதில் எவரும் சென்று பார்த்தது இல்லை எனவும், அதில் சென்று பார்க்க முயன்றவர்கள் செல்ல முடியாமல் திரும்பி விட்டதாகவும் கூறுகின்றனர்.

அந்த குகை ஆலயம் எழுந்ததிற்காக கூறப்படும் வாய் மொழி வரலாற்றுக் கதை இது. கலியுகத்தின் முன் பகுதியில் அன்று பரசுராம ஷேத்திரம் எனப்படட இன்றைய ஆலயம் உள்ள பகுதியில்  கொலை, கொள்ளை, வழிப்பறி என பல்வேறு தீமைகள் தொடர்ந்து கொண்டு இருந்தன. மக்கள் வாழ்க்கை துயரத்தில் இருந்தது. அதைக் கண்டு கவலை கொண்ட நாரத முனிவர் பகவான் மகா விஷ்ணுவிடம் சென்று மக்களின் துயர் தீர்க்குமாறு வேண்டிக் கொள்ள அவரும் பகவான் பரமேஸ்வரரிடம் சென்று ஆலோசனை செய்தார். மக்களின் துயர் தீர்க்க பகவான் விஷ்ணுவின் வாகனமானதெய்வீக வாசுகி என்ற நாக தேவதையையும், சிவகணங்களான ரக்தேஷ்வரி, பால்குணா, நந்திகோணா, வராஹி, பாபரகா, ஷேத்திரபாலா போன்ற கணங்களையும் புமிக்கு அனுப்பினர். பூமிக்கு வந்த அவை நாகவனா என்ற இடத்தில் வந்து தங்கி பக்தி மற்றும் தர்மத்தை போதித்தாலும் நாளடைவில் பூமியின் தாங்கள் வந்த காரணத்தை மறந்தனர்.  தலைகனம் கொண்டனர். தாங்கள் அனைவரும் ஈசனைவிட பலசாலிகள் என நினைக்கத் துவங்கினர்.

இதை எல்லாம் பார்த்த நாரதர் மீண்டும் கவலை கொண்டார். உலக அமைதிக்காக மேலுலகில் தவத்தில் இருந்த ஜபாலி முனிவரிடம் சென்று 'முனிவரே என்ன இரட்டை வேடம் போடுகின்றீர்கள் ? உலக அமைதிக்காக தவத்தில் இருக்கும் நீங்கள்தானே பரசுராம ஷேத்திரத்தில் அக்கிரமம் செய்து வரும் அருணாசுரா என்ற அசுரனை வளர்த்து விட்டிருக்கின்றீர்கள். நீங்கள்

காயத்ரி மந்திரத்தை அவனுக்கு மந்திரோபதேசம் செய்து வளர்த்து விட்டதினால்தானே அதை முறைபடி செய்து வரும் அவனை மும்மூர்த்திகளாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் அழிந்தால் மட்டுமே உலகில் மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அவனை அழிக்க பராசக்தியினால் மட்டுமே முடியும் என்பது விதி. ஆகவே நீங்கள் பூமியில் பரசுராம ஷேத்திரத்திரத்தில் உள்ள நாகவனா எனும் இடத்தில் தவம் இருந்து பராசக்தியின் அருளை வேண்டினால் அவள் அந்த அசுரனை அழிக்க தோன்றுவாள்' என்றார்.

அதை ஏற்றுக் கொண்ட ஜபாலி முனிவரும், தனக்கு துணையாக கங்கையை அழைத்துச் செல்வதாகக் கூறி கங்கைக் கரையை அடைந்து முதலில் அங்கு தவத்தில் அமர்ந்தார். சில நாட்களில் கங்கா தேவி அவர் முன் தோன்றி அவளை குறித்து தவம் செய்ததற்கான காரணத்தைக் கேட்டாள். ஜபாலி முனிவரும் தன் தவத்திற்கான காரணத்தைக் கூறி அவளை தன்னுடன் துணைக்கு வருமாறு அழைக்க, கங்கா தேவியோ தன்னுடைய வேகத்தை தென் பகுதியால் தாங்க முடியாது எனவும், ஏற்கனவே தன் வேகத்தை தாங்காமல் போன வடபகுதியை காக்க ஈஸ்வரர் தன்னை முடியில் கட்டி வைத்துக் கொண்டு விட்டார் எனவும், அதே சமயத்தில் பக்தர்களின் விருப்பத்தை தவிர்க்க முடியாது என்பதினால் அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற தான் பூமிக்கு அடியில் இருந்து பரசுராம ஷேத்திரத்தில் தோன்றுவதாக சம்மதித்தாள். ஆனால் அதற்கு முன்பாக அவர் சிவபெருமானின் அருள் பெற்று பரசுராம ஷேத்திரம் செல்லுமாறு அறிவுறை தந்தாள்.

ஜபாலி முனிவரும் அவள் கூறியதை ஏற்று சிவபெருமானை துதித்து தவம் இருக்க அவரும் அவர் முன் தோன்றி அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற தனது பூத கணங்களை அவருக்குத் துணையாக அனுப்பினார். அவரும் பரசுராம ஷேத்திரத்தை நெருங்கியதும் வந்து கொண்டிருந்த முனிவரையும்

சிவகணங்களையும் அடையாளம் தெரியாமல் தம் கடமையை மறந்துவிட்டு அகங்காரத்தில் இருந்த வாசுகியும் சிவகணங்களான ரக்தேஷ்வரி, பால்குணா, நந்திகோணா, வராஹி, பாபரகா, ஷேத்திரபாலா போன்ற  மற்றவர்களும் அவர்களுடன் யுத்தம் செய்யப் போன பொழுது முதலில் தூமவதியும் சாமுண்டியும் அவர்கள் முன் தோன்றி 'இப்போது முனிவருடன் வந்து கொண்டு இருப்பவர்கள் சிவகணைகள் ஆவார்கள்.  அருணாசுரா என்ற அசுரனை அழிக்க தவம் செய்ய அவர் வந்து கொண்டு இருக்கின்றார். நீங்களும் அதற்கென வந்து விட்டு கடமையை மறந்து வாழ்ந்து வருகின்றீர்கள். ஆகவே அவருடன் இணைந்து அனைவருமாக அந்த அசுரனை வதம் செய்யும் முயற்சி எடுப்போம் ' என்று கூற அதை ஏற்க மறுத்த வாசுகி குழுவினர் அவர்களுடன் யுத்தத்தில் இறங்கினர். ரக்தேஷ்வரி, ஷேத்திரபாலா போன்ற இருவர் மட்டும் முனிவரிடம் அடைக்கலம் ஆகிவிட யுத்தம் தொடர்ந்தது. தூமவதியும் சாமுண்டியும் தோற்றுப் போகும் நிலையில் தள்ளப்பட்ட பொழுது முனிவர் தாமே நேரடியாக அதில் இறங்கி ' இனி உனக்கு பூமியில் வாழ்வதற்கு இடமே கிடையாது போ ' என வாசுகிக்கு சாபமிட்டார். தன்னிலைக்கு வந்த பயந்து போன வாசுகி அவர் கால்களில் விழுந்து தன் தவறுக்கு அவரிடம் மன்னிப்புக் கோரியது.

ஒரு முறை கொடுத்த சாபத்தை விலக்கிக் கொள்ள முடியாது என்பதினால் முனிவர் கூறினார் ' வாசுகி இன்னும் சில காலத்தில் இந்த இடத்தில் ஈஸ்வரர் லிங்க உருவில் தோன்றுவார். அப்பொழுதுதான் உனக்கு சாப விமோசனம் கிடைக்கும். அதுவரை நீ அவரை துதித்தபடி இங்கு காத்திருக்க வேண்டும்' இப்படியாகக் கூறிய பின் ஜபாலி முனிவர் அங்கிருந்த குகை ஒன்றில் சென்று அமர்ந்து சிவனை துதித்தார். சிவபெருமானும் லிங்க வடிவில் அந்த குகைக்குள் தோன்றினார். கங்கா தேவியும் தான் வாக்களித்தபடி அந்த குகைக்குள் பூமியில் இருந்து எழுந்தாள். இதற்கிடையில் அருணாசுரன் தன்னை அழிக்க முனிவர் தவத்தில் அமர்ந்து இருக்கின்றார் என்ற சேதியைக் கேட்டு அவருடைய தவத்தை

அழிக்க பெரும் சேனையை குகைக்குள் அனுப்பினான். சிவகணங்களுடன் கடுமையான போர் மூண்டது.

அந்த அசுரன் தன்னுடைய தவத்தை கெடுத்து விடுவான் என பயந்த ஜபாலி முனிவர், தன்னுடன் இருந்த ஷேத்திரபாலா என்ற சிவகணத்தின் ஆலோசனைப்படி அங்கிருந்து தப்பிப் போய் மல்லிகாவனம் என்ற இடத்தில் அமர்ந்து கொண்டு அருணாசுரனை அழிக்க சண்டி ஹோமம் செய்து ஆதி சக்தியை துதித்தார். ஹோமத் தீயில் இருந்து வெளிவந்த ஆதி சக்தி தேவி அவர் செய்த தவறை சுட்டிக் காட்டினாள் 'எதையும் யோசனை செய்யாமல் நீங்கள் அவனுக்கு காயத்ரி மந்திரத்தை மந்திரோபதேசம் செய்து விட்டதினால்தான் அவன் பெற்று விட்ட வரத்தின்படி அவனை மனிதரோ, கடவுளோ, விலங்குகளாலோ எவராலும் அழிக்க முடியவில்லை. மக்களைக் கொடுமைப்படுத்தும் அவனை நான் தேனியாக சென்று அழிக்கின்றேன் ' என்று கூறிவிட்டு பெரும் தேனிக் கூட்டத்துடன் சென்று கடீல் என்ற இடத்தில் அவனைக் கொட்டியே அழித்தாள்.

தன் கடமையை முடித்துவிட்ட பரமேஸ்வரி தேவி அதன் பின் பரமேஸ்வரனிடம் இனி அந்த முனிவர் தவம் இருந்த குகையில் சிவலிங்கமாகவே இருக்குமாறும், கங்கையை வருடத்திற்கு ஆறு மாதம் அந்த இடத்தில் பூமியில் இருந்து தோன்றிய பின் அடுத்த ஆறு மாதம் வடநாட்டிற்கு செல்லுமாறும் கூறி விட்டு பகவான் விஷ்ணுவிடம் அவருடம் அந்த இடத்தில் தங்கி பக்தர்களுக்கு அருள் பாலிக்குமாறு ஆணையிட்டாள். முடிவாக தானும் அந்த இடத்தில் மகாலஷ்மி தேவி, மகா சரஸ்வதி தேவி, மற்றும் மகா காளி தேவியாக அவதரித்து அருள் பாலிப்பேன் எனவும் கூறி மறைந்தாள். அதன்படி அந்த முனிவர் தவம் இருந்த நெல்லி தீர்த்தம் சோமனாதீஸ்வரா என்ற குகை ஆலயமாக மாற, பக்கத்து இடங்களில் பகவான் விஷ்ணு ஆலயமும், தேவி ஆலயமும் தோன்றின.

# Nellitheertha Cave Temple

## Santhipriya



One of the ancient temples of Lord Shiva in the name of 'Nellitheertha Somanatheswara Cave Temple' is located on the outskirts of Mangalore and maintains a peaceful and divine aura in the state of Karnataka. Believed to belong to 15th Century, one need to crawl on their knees to reach the sanctum sanctorum inside the cave where a Shiva ling has been enshrined. This has made out of pure Saligrama and is in Arthanareeswarar (half Lord, half Goddess) form. As there is no proper gateway to the temple, the visitors are forced to crawl in on their knees to go inside. There is a water tank inside the cave where the Shiva Ling has been enshrined which is stated to be self-manifested.

Since water keep on dripping down inside in the cave in the shape of gooseberry, it has got the name Nelli theertha (Nelli means gooseberry and theertha meaning water). In fact, the water lake inside is made up of water dripping down. This temple remains open for public only from October till April since the water which remains stagnated inside need to get evaporated or enter into the ground below to regenerate as the cave houses snakes of all varieties, scorpions, porcupines and huge number of bats reptiles, bats and other deadly creatures which too get rejuvenated during the period the cave remains closed. Troubling or hurting the animals inside the cave is strictly prohibited. The most surprising fact till date has been that the reptiles or the deadly creatures have never harmed even one who crawl and go inside.

500 meters away in the eastern side of this temple is a scenic place called Ambalathattappadavu, a hill top while on the northern side is a water tank named Nagabarage. The devotees are allowed to go into the temple only after taking bath in this tank. Another scenic spot which is nearby is called Arasu mansa. As per the local fable, the soul of the dead rulers wander in this place in the night time and therefore people are prohibited to visit there after dusk.

The entrance to the cave is huge and wide. Within few feet, the trail narrows down and one is forced to bend and crawl forward. Finally, after about 300-400 feet, the cave widens again and huge lake is seen in which the Shiva Ling has

been enshrined. The most amazing part of the cave is the fine quality of the mud available inside. It is said that the mud here has healing powers and is given as prasad to the devotees. Right behind the water tank in which the Shiva Ling has been enshrined is a second cave. But it remains inaccessible to the public. No one has so far gone there.

As per Hindu mythology, the cave was originally used by sage Jabali for meditation and penance. The story of the temple goes like this. As Kaliyug got ready to dawn, the Parasurama Shethra which is the present temple site witnessed robbery, murder and spate of other crimes. The folks living in that shethra were in misery due to the atrocities of asuras. Therefore Maharishi Narada met Lord Mahavishnu and sought his intervention to end their misery. The Lord sent divine serpent Vasuki along with Shivaganas like Raktheswari, Palguna, Nandi Gona, Varahi, Pahara and Shethrapala to guard the place. Once they reached Bhoolog, though initially they promoted bakthi moment, as the days passed, their heads became heavier with arrogance feeling they were superior to even divines.

Maharishi Narada was upset. He met Sage Jabali who was in penance for the welfare of mankind and admonished him for having given the Gayathri mantra diksha to Asura Arunasura with whose power he unleashed acts of terror, and has became powerful and invincible. Unless he was killed, the people in the universe cannot remain in peace and therefore requested Sage Jabali to go to Nagavana in

Parasura Shethra and sit in penance seeking intervention of Goddess Parasakthi to manifest and kill the asura.

Sage Jabali agreed to undertake the penance, but desired to take the help of Goddess Ganges with him in fighting with Arunasura. When he approached Goddess Ganges with request, she regretted to go along with him on surface telling the sage that the south cannot withstand the fury of her flow and for the same reason, Lord Shiva has locked her on his head gear to reduce her fury of flow to save the areas where she flew in north. However she assured sage Jabali to flow through the Parasurama Shethra as underground river to support the folks, which was acceptable to him. She further advised him to seek the blessings of Lord Shiva too.

Accepting her suggestion, Jabali Muni meditated on Lord Shiva and when he appeared before him, he requested his blessings in the task he has undertaken. Lord Shiva blessed him and sent few of his Shivaganas to help him in the war against the asura. When they reached Parasurama Shethra, they could not be identified by the deva ganas earlier sent by Lord Vishnu to contain the tyranny of Arunasura, but bypassing their main task, they were engaged in other activities to promote their own interest. The moment Duma Devi and Chamunda Devi who came there, identified the Shiva ganas who were nearing the site, they advised the group of ganas sent earlier by Lord Vishnu to join with sage Jabali in the fight against Arunasura. While Raktheswari and Shethrapala agreed to their suggestion,

the rest resisted and fought with the forces of sage Jabali. When both Dhumavati Devi and Chamunda Devi were pushed to the corner of defeat, they surrendered and apologised to sage Jabali who got annoyed with Vasuki and cursed her that she cannot visit Bhoolog anymore. When she sought pardon, he expressed his inability to take back the curse once pronounced, and modified that she would get relieved of the curse once Lord Shiva manifested in the form of a Shiva Ling there and till then she should wait there praying Lord to manifest. After pronouncing so, he went and sat in penance seeking blessings of Lord Shiva. Soon Lord Shiva manifested inside the cave in the form of Shiva Ling to strengthen the hands of sage Jabali. Goddess Ganges too flew underneath that shethra. When Arunasura came to know that the saint was in penance for vanquishing him, he attempted to wage a war against the saint with a huge force.

In order to avoid direct fight with Arunasura, on the advice of Shethrapala, the sage moved to adjacent place called Malligavanam and prayed to Athi Parasakthi who manifested before him and she too admonished him on the folly of the saint in making Arunasura powerful but assured to kill the asura in the form of honey bee. Keeping up to the promise she killed the asura in a place called Kateel by turning into giant honey Bee. After completing her mission the Devi requested Lord Shiva to remain in the cave blessing folks of the land and also requested Lord Vishnu too stay there. Goddess Ganges was also requested to flow in that shethra for six months in a year and go back to the north for the remaining six months. Goddess Adi Parasakthi pronounced that she too would manifest there in the

form of Goddess Saraswathi, Goddess Mahalakshmi and Goddess Kali Devi to guard the folks. Later some time Somanatheswara temple came up where saint Jabali sat in penance and two temples, one for Lord Vishnu and other for the Goddesses too came up in nearby places.